பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 06 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. விவசாயிகளின் நலனுக்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து எடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. ஜம்மு காஷ்மீரில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் இன்று தொடங்கி வைக்கிறார்.
3. வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.
4. ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடகொரிய அதிபர் திரு கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.
5. உலகக் கோப்பை டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர் எட்டு சுற்றில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

---- இனி விரிவான செய்திகள் ----

[]<<>*<>>[]

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள பிரதமர், விவசாயிகளின் நலனுக்காக அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது என்றும், அதன் ஒரு பகுதியாக வாரணாசி விமான நிலைய மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவில் உள்ள வாதவனில் பெரிய துறைமுகத்தை உருவாக்கும் மத்திய அமைச்சரவையின் முடிவு, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, பெரிய அளவில் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

[]<<>*<>>[]

மத்திய அமைச்சரவையின் முடிவுகளை வரவேற்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா உள்துறை அமைச்சகத்தின் சார்பில் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின்

வளாகங்களை நாடு முழுவதும் நிறுவ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது முக்கியமான நடவடிக்கை என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் குற்றவியல் நீதி அமைப்பு மேம்படும் எனவும் இந்த முடிவுக்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

[]<<>*<>>[]

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று ஜம்மு காஷ்மீர் செல்கிறார்.

இன்று மாலை 6 மணி அளவில் ஸ்ரீநகரில் நடைபெறும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல், ஜம்மு காஷ்மீரின் வளர்ச்சி என்ற நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

அரசு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட இரண்டாயிரதத்துக்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளையும் திரு நரேந்திரமோடி வழங்குகிறார்.

சர்வதேச யோகா தினத்தையொட்டி நாளை காலை 6.30 மணிக்கு ஸ்ரீநகரில் நாளை காலை நடைபெறும் யோகாசன நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

[]<<>*<>>[]

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் பிறந்த நாளையொட்டி அவர் பங்கேற்ற சிறப்புப் பேட்டியை தில்லி ஆகாஷவாணி இன்று ஒலிபரப்புகிறது.

முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி மேற்கொண்ட இந்த நேர்காணல், காலை மணி 8-45-க்கு ஆகாஷவாணி கோல்ட் மற்றும் தேசிய அலைவரிசைகளில் ஒலிபரப்பாகிறது.

ஆகாஷவாணியின் யூ-டியூப் தளம் மற்றும், பிற சமூக வலைதளங்களிலும் இந்த நேர்காணல் இடம்பெறுகிறது.

[]<<>*<>>[]

வெளியுறவுத் துறை அமைச்சர் திரு எஸ் ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

இந்தப் பயணத்தின்போது, இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்னர் வெளியுறவு அமைச்சர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இதனிடையே இலங்கையின் தொழில் வளர்ச்சிக்கு இந்தியாவுடனான ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டியது அவசியம் என அந்நாட்டு அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்திய வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் மேற்கொள்ளும் இலங்கைப் பயணத்தின்போது இது குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

[]<<>*<>>[]

உலக வங்கியின் உலகளாவிய முதல் நூறு தரவரிசையில் இந்தியாவின் ஒன்பது பெரிய துறைமுகங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விசாகப்பட்டினம் துறைமுகம் 115–வது இடத்தில் இருந்து 19-வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் காமராஜர் துறைமுகம் 47–வது இடத்தையும், சென்னை துறைமுகம் 80–வது இடத்தையும் பிடித்துள்ளதாக அவர் கூறினார்.

துறைமுகங்கள் மற்றும் நீர்வழித் தடங்கள் மேம்பாட்டில் சாகர்மாலா திட்டம் முக்கிய பங்காற்றுவதாக திரு சர்பானந்த சோனாவால் குறிப்பிட்டார்.

[]<<>*<>>[]

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட 70-க்கும் மேற்பட்டோர் புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடைய இந்த சம்பவம் தொடர்பாக சி பி சி ஐ டி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு ஷர்வன்குமார் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், புதிய ஆட்சியராக திரு எம் எஸ் பிரசாந்த் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மாநில அரசு கூறியுள்ளது.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு சமய்சிங் மீனா தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய கண்காணிப்பாளராக திரு ரஜத் சதுர்வேதி நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கள்ளக்குறிச்சி சம்பம் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த குற்ற செயலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தடுக்கத் தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சமூக வலைதளப் பதிவில் அவர் தெரிவித்துள்ளர்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகள் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக தமிழக ஆளுநர் திரு ஆர். என் ரவி கூறியுள்ளார்.

தமிழகத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைத் தடுக்க மாநில அரசு தவறி விட்டதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கள்ளகுறிச்சிப் பகுதியில் கள்ளச்சாராய விற்பனை நடைபெறுவதாக புகார்கள் வந்த நிலையிலும், அரசு மெத்தனமாக செயல்பட்டதே தற்போதைய துயர சம்பவத்துக்குக் காரணம் என்று கூறியுள்ளார்.

**[]<<>*<>>[]**

யுஜிசி - தேசியத் தகுதித் தேர்வு ரத்து செய்யப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடத்துக்குத் தகுதி பெறுவதற்கும், ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கும் தேசிய தேர்வு முகமையால் இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த தேர்வில் முறைகேடுகள் நடந்திருக்க வாய்ப்பு இருப்பதாக தேசிய இணையதள குற்ற ஆய்வுப் பிரிவு தெரிவித்ததை அடுத்து, இந்த தேர்வு ரத்து செய்யப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

மீண்டும் புதிதாக தேர்வு நடத்தப்படும் என்றும் அதற்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<>*<>>[]

தொழிலாளர் காப்பீட்டுத் திட்டத்தில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 16 லட்சத்து 47 ஆயிரம் பேர் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் 18 ஆயிரத்து 490 புதிய நிறுவனங்கள் தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டத்தின் சமூகப் பாதுகாப்பு வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் மேலும் அதிக தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் எனவும் அமைச்சகம் கூறியுள்ளது.

25 வயதுக்குட்பட்ட ஏழு லட்சத்து 84 ஆயிரம் ஊழியர்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<>*<>>[]

ஒடிசா சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக பிஜு ஜனதா தள கட்சியின் தலைவரும், அம்மாநில முன்னாள் முதலமைச்சருமான திரு நவீன் பட்நாயக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புவனேஸ்வரில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பிஜு ஜனதா தள கட்சியின் மூத்த தலைவரான திரு பிரசன்னா ஆச்சார்யா எதிர்க்கட்சி துணைத் தலைவராகவும், முன்னாள் பேரவைத் தலைவர் பிரமிளா மாலிக் கட்சியின் தலைமை கொறடாவாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

[]<<>*<>>[]

சிக்கிமில் வெள்ளத்தில் சிக்கித் தவித்த சுற்றுலாப் பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மங்கன் மாவட்ட நிர்வாகம், மாநில அரசின் பல்வேறு துறைகள், எல்லை சாலைகள் அமைப்பு, மாநில பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் உள்ளூர் தன்னார்வலர்கள் ஒருங்கிணைந்து, கடந்த மூன்று நாட்களாக இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

[]<<>*<>>[]

வட கொரியாவும் - ரஷ்யாவும் ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

பியாங்-யாங்கில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினும், வடகொரிய அதிபர் திரு கிம் ஜோங் உன்-னும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டு செய்தியாளர் சந்திப்பில், பேசிய திரு கிம் ஜோங் உன், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை இது வலுப்படுத்தும் என்று கூறினார்.

எதிரி நாடுகள் தாக்கும்போது, ரஷ்யாவும் வடகொரியாவும் பரஸ்பரம் ராணுவ உதவிகளைச் செய்துகொள்ளும் அம்சம் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பன்முகத் தன்மை நிறைந்த இந்த ஒப்பந்தம், தற்காப்புக்கானது என்று திரு கிம் ஜோங் உன் கூறினார்.

[]<<>*<>>[]

உலகக் கோப்பை டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர் எட்டு சுற்றில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

பிரிஜ்டவுணில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

[]<<>*<>>[]

இத்தாலியில் நடைபெற்று வரும் வெனைட்டோ சர்வதேச ஓப்பன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் ருமேனியாவின் இர்னியா பாராவை 6-2, 2-6, 6-0 என்ற செட் கணக்கில் வென்றார்.

[]<<>*<>>[]

லண்டனில் நடைபெற்று வரும் குயின்ஸ் கிளப் சேம்பியன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின் மாத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

***End of News***